# அகிம்சா ஆட்சியின் அலங்கோலங்கள்

## சிறைப்படுத்தினர், சுட்டனர், சாகடித்தனர்!


# திராவிடநாடு

மலர் 9 | 10-9-50 | இதழ் 11

இலங்கை 15 சதம்] [விலை அணா இரண்டு


### உள்ளத்தைக் கிள்ளும் புள்ளி விவரம்

1782-முறைபோலீஸ் ராஜ்யம் நடத்தியுள்ளனர்.

இதில்,

3784-பேர் மடிந்தனர்—9342 பேர் காயமடைந்தனர்!

இன்று வரை,

50000 பேர்கள்வரை சிறையில் வாடுகின்றனர்—பிற கட்சித் தோழர்கள்

இங்குதான்,

17-முறை சிறைக்கைதிகளை சுட்டுள்ளனர்.

இதில்,

82-பேர் மாண்டுபோயினர்

ஆம், அகிம்சையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்ட இராம ராஜ்யத்திலே மூன்று சுதந்திரத் திருவிழாக்கள் கொண்டாடி முடிப்பதற்குள் இத்தனை அலங்கோலங்கள்—கண்ணீரைப்பெருக்கும் புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது பம்பாயிலிருந்து வரும் ஏடு, பிளிட்ஸ் டெல்லிப் பேராசிரியர் ஒருவர் குறிப்பு தருகிறார் என்பதாக!

புள்ளிக் கணக்கில் கூடுதல், குறைதல்பற்றி வாதம் எழுப்பித் திருப்தி தேடலாமே யொழிய அதுவும், வீம்புக்காக, வீராப்புப் பேசுவதற்காக—எதுவும் இல்லையென்றுமட்டும் எவரும் சொல்ல முடியாது.

காங்கிரசாட்சி, வெள்ளையராட்சி விரண்டோடியபிறகு பதவியிலமர்ந்தது. வருமுன்கூறிய வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்டன – வாழ்வளிக்கப்போகும் வரப்பிரசாதர்கள் அவர்கள் என்று நாட்டுமக்கள் நம்பும்படி வாயினிக்க, கேட்டவர் செவியினிக்கப் பேசிவிட்டுப்பீடமேறினர். ஆனால் அவர்கள் நாட்டுமக்களுக்குத் தந்தது நல்வாழ்வல்ல—நடுக்கந்தரும் அடக்குமுறை அநியாயம்!

காங்கிரசார், இந் நாட்டுக் காவலர்களாக வந்து மூன்றாண்டுகள் முடிந்துவிட்டன என்றே கூறலாம். அதற்குள் அவர்கள் ஆட்டமும் பாட்டமும் பயங்கரக் கூத்தாக மாறி, மக்களின் மனதிலே மருட்சியையும், கொஞ்சம் சிந்திக்கத் தெரிந்தவர்கள் உள்ளத்திலே புரட்சியையும் தூவிவிட்டன.

காங்கிரஸ் இன்று ஓடுகிற வேகம்—நிச்சயமாக அழிவுக் குழியில் தள்ளிவிடும் என்பதிலே துளியும் சந்தேகமில்லை!

எந்த நாட்டு அரசியலிலும் காணமுடியாத அக்கிரமங்கள்—மூன்றாண்டுகளில் 1782 முறை போலீசார் சுட்டிருக்கின்றனர், ஏதேதோ, காரணங்களைக் காட்டி! என்ன அநியாயம்!! எதேச்சாதிகார வெறியர்கள் கூடக் கொஞ்சம் கண்களைக் கசக்குவர் இந்தச் செய்தியைக் கேட்டால்—3784 பிணங்களைக் காணிக்கையாக்கி இருக்கின்றனர் இந்த நாட்டு மக்கள், இந்த காங்கிரசாட்சிக்கு! காலொடிந்தவர், கண்ணிழந்தவர், கைபோனவர், வெட்டுப்பட்டவர், வெடிகுண்டால் வேதனைபட்டோர் தொகை 9342 பேர்-நினைக்கும்போதே நெஞ்சு நடுங்குகிறதல்லவா? அவர்கள் தியாகசீலர்கள் என்று ஊரின் காது செவிடாகும்வரைப் பேசிப் பழகியவர்கள் — அவர்கள் தாங்கள் பட்ட அவதிகள் என்று மக்கள் கவனத்திற்கு எதை எதைக்கொண்டு வந்தனரோ, அவை அத்தனையும் அவர்கள் ஆட்சியிலே நடந்துவிட்டன.


50000 பேர்கள் சிறையில் வாடுகின்றனர்—திருடவில்லை, கொலை செய்யவில்லை, கள்ளக் கையொப்பமிடவில்லை, கண்டவளைக் கைபிடித்திழுத்து காலித்தனம் செய்துவிடவில்லை, குற்றம் எதும் புரிந்துவிடவில்லை — எதிர்க்கட்சியிலிருப்பதால், ஏடெழுதியதால், நாடுமக்களுக்கு ஏற்ற திட்டங்களை எடுத்துச் சொன்னதால்! என்ன அநீதி!!

உலகின் பிறநாட்டுச் சரித்திரங்களிலே காணமுடியாத ஒரு விசித்திர விபரீதம் — ஆச்சர்யந்தரும் அக்கிரமம்—அநியாயம் இங்கே நடந்திருக்கிறது. நிராயுதபாணிகளாக உள்ள சிறைக்கைதிகளை ஒருமுறை, இருமுறைகள்மட்டுமல்ல — பதினேழு முறைகள் சுட்டிருக்கின்றனர். 82 வாலிபர்களின் உயிரைக் குடித்தனர் — ஆயுதமிழந்து நின்ற அரக்கர்குல தலைவனை இன்று போய் நாளை வா என்று கதை படித்துக்களித்துக் கூத்தாடும் தோழர்களின் ஆட்சியிலே—இராமராஜ்யத்திலே-வெட்கம், வெட்கம்! காங்கிரசாட்சி சாதித்துள்ள மாபெரும் சாதனைகளைக் கண்டு அவர்கள் பூரித்துப் போவார்கள்!!

இன்னும் அவர்கள் தடுத்த கூட்டங்கள், தடைபோட்ட நாடகங்கள், பறிமுதல் செய்த புத்தகங்கள், எழுத்தாளர்கள்மீது பதிவு செய்துள்ள வழக்குகள்—என்று பட்டியலை விரிவுபடுத்தினால் வேதனை விரியும்—காங்கிரசாட்சியின்முறைகெட்ட போக்கு புரியும்!

*

### கோவில்பட்டியில் கூடிய வீரர்கள்



இருண்டுவிட்ட திராவிடத்தில் இன்பஒளி பரப்பத் தொடங்கிவிட்டோம். போர் என, வாழ்வைப்பறித்த வடநாட்டு மந்திரிகள் வரும்பொழுது கருப்புக்கொடி பிடிப்பது என்று தீர்மானித்தனர், கோவில்பட்டியில்,—திராவிட வரலாற்றிலே தனியிடம் பிடித்த கோவில்பட்டி மாநாட்டில் பங்குகொண்ட வீரர்களில கூடியிருந்த ஒரு பகுதி. மேலே.

## தாண்டன் தலைவராகிவிட்டார்!

### தாண்டவேண்டிய நெருக்கடிக் கண்டங்கள்

### அழிவுப் பாதையில் காங்கிரஸ்

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டியே கூடாது, அரசியல் நிர்வாகத் தலைவரே அதனையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என அறிக்கை விட்டார்-அவரே, பிறகு போட்டியிலும் கலந்துகொண்டார். இரட்டைக் குதிரை சவாரி செய்ய அழைத்தார்—முடியவில்லை! கிருபளானியோ, தனது கருத்தே, தேம்பிடும் தாயகத்திற்குத் தித்தித்திடும் திட்டமென நம்பினர். அதனால் வெளியிட்டார், தனது மனச் சுரங்கத்தில் தோண்டியெடுத்த கருத்துத் தங்கத்தை!

காங்கிரஸ்தான், நாட்டின் ஏகப் பிரதிநிதிஸ்தாபனம் என்பது அவர் கனவு—ஆகவே தான் கட்சியை, ஆட்சிக் குழுவாக்கத் துடித்தார்—முடியவில்லை!! இதனாலேயே கருத்து வேறுபாடு கொண்டு முன்னர் விலகவும் தவறவில்லை, கிருபளானி!

ஜனநாயக ஆட்சியிலே கட்சி ஆட்சி நடப்பதுண்டு — ஆனால் அது நீடித்திருக்கும் என்ற நினைப்பு கூடாது. கட்சிகள் மாறி மாறி வரும்! அதை மறந்து ஏகாதிபத்திய எண்ணங்கொண்டு, ஆட்சியையே கட்சிக் காரியமாக்கிடக் கூடாது—முடியாது-முடிந்தாலும் நீடிக்காது!

அந்தக் கருத்துகொண்ட கிருபளானி போட்டியிட்டார்.

இந்தி மோகமும், இன்னும் பிடிவாதப் பண்புகள் பலவும் நிறைந்தவர்—வைதிக எண்ணங்களின் பிடிப்பும், மதத்தின் பேரால் மௌடீகத்தை வளர்த்து வாழ்வுறிஞ்சுவோரிடம் அனுதாபமும், மதவெறியின்மீது கட்டப்பட்ட ஸ்தாபன வளர்ச்சியிலே ஆர்வமும் கொண்டவர், புருஷோத்தமதாஸ் தாண்டன்.

மற்றொருவர் சங்கரராவ் தேவ் போட்டியிட்டனர்; தாண்டன் வெற்றி பெற்றார்—இனிமேல்தான் ருசிகரமான பகுதி இருக்கிறது!

ஆட்சிக் குழுவிலே உள்ள பெரும் புள்ளிகளுக்குள்ளேகூட இதனால் மனப் பிளவு ஏற்படக் காரணமிருக்கிறது.

நேரு, கிருபளானியை ஆதரித்தார்.

பட்டேல், தாண்டன் பக்கமிருந்தார்.

தாண்டனே குறுகிய கொள்கைகளைப் பிடிவாதமாக வற்புறுத்துவார் என்பதை நாடறிந்திருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆட்சிக் குழுவாருக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் மோதுதல் ஏற்படும். தாண்டன் தலைவரானதால்தாண்டவேண்டியபலபிரச்சினைகள் எழப்போகின்றன என்பதிலேமட்டும் சந்தேகமில்லை.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தலில் சுபாஸ், சீதாராமையா போட்டி நடந்தபோது இருந்த பரபரப்பைவிட இப்பொழுது அதிக உணர்ச்சி வேகம் பரவியிருந்தது நாடுமுழுவதும்—ஏன்? ஆளுங்கட்சி காங்கிரஸ். அதன் தலைவராக வருவதால் அடைகிற இலாபங்கள் எத்த

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ இதயகீதம் முழக்க எல்லோரும் வாரீர்! ★

வகுப்புநீதி சாயக் கண்டு வேதனை அடையும்

**மாணவர்கள்**

வகுப்பு நீதி மாயக் கண்டு திகில் கொள்ளும்

**அதிகாரிகள்**

விலைவாசி விஷம்போல் ஏறக் கண்டு விம்மிக் கிடக்கும்

**நடுத்தர மக்கள்**

சோற்றுக்கு வழியின்றி சோளமும் கிடைக்காமல், புளியங்கொட்டைக்கு அலையும்

**பொதுமக்கள்**

நூலுக்குத் திண்டாடி கூலிக்குப் போராடி, வாழ்வுக்குத் திண்டாடும்

**நெசவாளி**

அகவிலையால் அவதிப்பட்டு, முதலாளியிடம் குட்டுப்பட்டு தேய்ந்து போகும்

**தொழிலாளி**

மக்கள் பணியாற்றச் சென்று அடக்கு முறையால் தாக்கப்பட்டு, சுடுகாடு சென்றவரும், சிறையிலே வதைபவருமாக உள்ள

**பொதுநல ஊழியர்கள்**

கோழியுடன் எழுந்து, கோட்டான் கூவும்போது தூங்கி, காலமெலாம் உழைத்து, கால் வயிற்றுக் கூழுக்குக் கலங்கித் தவிக்கும்

**உழவர்கள்**

இவர்கள் சார்பாகப் பேச, நீதி கேட்க, உரிமைக்குக் கிளர்ச்சி செய்ய, நேர்மையாளர்கள், அறநெறி கொண்டோர், யாரும் இல்லையா, திராவிடத்தில்!

ஆட்சியாளர்களின் போக்கைக் கண்டிக்கும் ஆண்மையாளர்கள் இல்லையா?

இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம் என்ற அளவு நிலைமை இருப்பது கண்டு, அச்சமா?

ஊமையாய், ஊமையாய், வாழ்வதா தமிழ் வீரம்!!

உரிமைக் குரலில் கேட்க முன் வாருங்கள். ஊராளும் முறை இது தானா, இதற்காகத்தானா, தடியடிபட்டோம், சிறைப்பட்டோம் என்று கேட்கத் தயங்காதீர்கள்.

நாம் கேட்டால், ஆட்சியாளர்களின் காதில் விழவா போகிறது, என்கிறீர்களா?

நியாயமான கேள்வி — விழாது தான்!—ஆனால் கண் இருக்கிறது, காண!

வெள்ளைக்காரனிடமிருந்து விடுபட்டோம்—ஆனால் சுகப்பட்டோமா? இல்லை! டெல்லிக்காரரிடம் அடிமைப்பட்டோம்.

எப்போதும் இல்லாத முறையிலே திராவிடம் அடிமைநாடாகிவிட்டது.

அரசியல் அதிகாரம் அவ்வளவும் டில்லியில்!

வியாபாரம், தொழில்வளம், முழுவதும் வடநாட்டில்!

திராவிடத்திலோ,

பஞ்சம்
பட்டினி
வேலையில்லாத் திண்டாட்டம்
கள்ள மார்க்கட்டுக்காரர்களுக்குக் கொண்டாட்டம்
அரிசி ஆறு அவுன்சு!
அதுவும் ஏட்டில்!!
வீட்டில் கிடைப்பதோ
பருத்திக்கொட்டை
புளியங்கொட்டை!!

இந்த இலட்சணத்தில் டில்லியில் தயாரிக்கப்பட்ட அரசியல் சட்டம் கம்யூனல் ஜி. ஒ-வை ஒழித்துவிட்டிருக்கிறது.

டில்லி தர்பாரால்,
உரிமை பறிபோய்
வாழ்வு இருண்டு
செல்வம் தேய்ந்து
வகுப்பு நீதி சாய்ந்து
நாம் அல்லற்படுகிறோம்—!

இதைக் கண்டிக்க முன்வரவேண்டாமா—நாட்டுப் பற்றுள்ளோர்!

கண்டனத்தைக் காட்ட, நமக்குள்ள, அமைதியான வழி, பலாத்காரமற்ற வழி,

**கருப்புக் கொடி காட்டுவது!**

உரிமை வேட்கைகொண்டோரே! உத்தமர்களே!

**கருப்புக் கொடி காட்டுங்கள்!**

டில்லி மந்திரி எவர் வந்தாலும்,
எங்கு வந்தாலும்
அவர் காணட்டும்,

**கருப்புக் கொடிகளை!**

திராவிடரின் நிலையை டில்லி தர்பார் அறியட்டும்,

**காட்டுங்கள் கருப்புக் கொடி.**

## எதிர்த்துக் கிளம்பிவிட்டோம்!

**நாம்**
வடநாட்டால் வாழ்விழந்து விட்டோம்.

**வடநாடு**
வாணிபத்தால் தென்னாட்டை அடிமைகொண்ட வர்ணாஸ்ரமப்பாடி வீடு.

**வாணிபம்**
பொன்னோடு வந்து கறியொடு பெயரும் யவனர் நாவாய்கள் வந்து நாட்கணக்கில் காத்துக் கிடந்த துறைமுகங்கள் இங்கு—நம் பொன் நாணயங்கள் புதைந்து கிடந்ததாக இன்று பேசப்படும் பூமிகள் பாரில் பலப் பல பகுதிகளில்! இருந்தும் வாணிபத்தால் வாழ்விழந்தோம் நாம். சரித்திரம் சொல்கிறது இப்படி.

**சரித்திரம்**
பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரையில் தென்னாடு வடநாட்டின் பகுதியாக ஓரே ஆட்சியில் இருந்ததில்லை. கிருஷ்ணா நதிக்குத் தெற்கே அசோக மன்னரின் சாம்ராஜ்யமோ, சந்திரகுப்தரின் செங்கோலோ நீண்டதில்லை. கோல் கொண்டா கோட்டையைப் பிடித்த அவுரங்கசீபும் மாண்டுவிட்டான். வெள்ளையன் வந்தான், படிப்படியாக ஒரு ஆட்சி வந்தது, இந்தியா முழுவதற்கும் என்று சரித்திரம் கூறுகிறது.

**ஒரு ஆட்சி**
ஒட்டாத வடநாட்டையும், தென்னாட்டையும் ஒட்டவைத்து வேடிக்கை காட்டுகிறார்கள். வேதனைப்படுகிறோம். வாணிகத்தால் அடிமைகொண்டுவிட்டார்கள் அவர்கள். அதனை எதிர்த்துக் கிளம்பிவிட்டோம் நாம் என்பதை தெரிவிக்க வேண்டும்.

**ஆகவே**
வடநாட்டு மந்திரிகள் வரும் பொழுது கருப்புக் கொடி காட்டுவோம். திராவிடம் பிரியும்வரை ஒரு இடத்தில் இருப்புக்கொள்ளாதவர்களுக்கு என்று போர்முரசு கொட்டுவோம்!

**திராவிடர்**
தீய்ந்துவிட்டனர், தீயரின் சேர்க்கையால் — துயரக் கேணியில் வீழ்ந்தனர்.

**வாழ்ந்தவர்**
விலா எலும்பிழந்தவர், வீழ்ந்தவர், வீரமழிந்தவர், சோரம் போனவர் என்றாகிவிட்டனர் இன்று.

**கபடறியார்**
காதல், கற்பு, வீரம் என்பதே அவர் கண்டு போற்றியவை.
வஞ்சனை, சூது, தந்திரம், மந்திரம்-அவர் அறியாதவை.

**யாரே**
அவர் நாட்டு வளத்தை குறை கூறுவர்?
இனத்தின் ஏற்றத்தை இழித்தும் பழித்தும் பேசுவர்?
அவர்களின் மன நலத்தை போற்றாது போவர்?

**திருவிடம்**
அவர்தம் பிறப்பிடம், இருப்பிடம், சாகப் போவதும் இதுவே—இன்றேல் அடையப் போவது திராவிடம்!
முன்னிருந்த இடம், இன்று வடவரால் கபளீகரமான பூமி, நாளை நாம் அடையப்போகிற சுதந்திர நாடு. அதற்கான 'துவஜாரோகணம்' செய்துவிட்டோம் என்பதே நம், கருப்புக்கொடி!

**கருப்புக்கொடி**
வாடிக்கிடக்கிற நம் நரம்புகளின் புரண்டோடும் இரத்தத் துளிகளின் புரட்சி முரசு—உறங்கிக் கிடக்கும் நம் இதயத்தின் திருப்பள்ளி எழுச்சி!

நாளை நடத்தப்போகும் அறப் போரின் முதல் போர்.

தொடங்கிவிட்டோம், இதுவரைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து முடியாமையால்! புறப்பட்டுவிட்டோம், துயரத்தின் கடைசி கட்டம் வரை விரட்டியடிக்கப்படடு விட்டதால்! என்பதன் அறிகுறி.

## ஆரூர் கிருஷ்ணசாமி மறைவு

திராவிடரியக்கப்பற்றும், சுயமரியாதை வேகமும், பிறர்க்கென உழைக்கும் பெற்றியும் கொண்ட திருவாரூர் எஸ். பி. கிருஷ்ணசாமி அவர்களை சாவு அணைத்துக்கொண்டது என்பது அறிய மிக, மிக, வருந்துகிறோம். ஆசிரியராக இருந்து, அவர் தயாரித்துத் தந்த முன்னணி வீரர்கள் பலர். புன்சிரிப்போடு ஆனால் புயல் போல, பார்ப்பனரல்லாதாருக்குச் சேவை செய்த செம்மல் அவர். வயதில் இளைஞர் — வாழ்க்கை மலராகஇருந்த பருவம், சாவால் கொள்ளைகொள்ளப்பட்டதை அறிய திடுக்குற்றோம். தனதுமுதல் மகனைப் பிரிந்த துயரால் துடித்துக்கிடக்கும் திரு. எஸ். பெரியசாமி அவர்கட்கும், முன்னேற்றக் கழகத்தின் செயல் வீரர்களான மறைந்த வீரரின் தம்பிகள் சேதுபதி, சதாசிவம் ஆகியோருக்கும், அவரது நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## "திராவிடன்"

**வார இதழ்**

ஆசிரியர் என். வி. நடராசன்

**15—9—50 அன்று வெளிவருகிறது**

## சி. என். ஏ. சுற்றுப் பிரயாணம்

| | |
|---|---|
| 10—9—50 | திருமால்பூர் (தி. மு. க. பொதுக் கூட்டம்) |
| 11—9—50 | காஞ்சிபுரம் (பெற்றோர்கள் நாள்) |
| 13—9—50 | சென்னை சிந்தாதிரிப்பேட்டை (உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டம்) |
| | சென்னை ராயப்பேட்டை புதுப் பேட்டை (தி. மு. க. பொதுக் கூட்டம்) |
| 14—9—50 | வ. ஆ. திருப்பத்தூர் (திருமணம்) |
| 15—9—50 | குறிஞ்சிப்பாடி (திருமணம்) |
| 17—9—50 | தூத்துக்குடி (தி. மு. க. பொதுக் கூட்டம்) |
| 18—9—50 | திசையன்விளை (தி. மு. க. பொதுக் கூட்டம்) |

## பிறப்பு

மதுரை: மறுமலர்ச்சிக் கழக செயலாளர் தோழர் அ. பிச்சையின் துணைவியாருக்கு 20-8-50 அன்று ஒரு பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம்.

## பதிவுத் திருமணம்

26—8—50-ல் காலை தஞ்சாவூரில் பிரபல பாத்திர வியாபாரி தோழர் நாராயணசாமி புதல்வர் தோழர் கோவிந்தராஜலுவுக்கும் திருவாரூர் சதர்ன் சோப்வொர்க்ஸ் உரிமையாளர் தோழர் மாணிக்கம் புதல்வி திருமதி சரோஜனி தேவிக்கும் காரைக்குடி காங்கிரஸ் பிரமுகர் சா. கணேசன் அவர்கள் தலைமையில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. 'தமிழ் முரசு' ஆசிரியர் ம. பொ. சிவஞானம், தோழர் கே. எ. மதியழகன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டியும் சீர்திருத்த மணத்தின் அவசியம் குறித்துப்பேசினர். தோழர் கோபால்சாமிநன்றிகூறமணவிழா முடிந்தது. விழாவிற்கு நகரசபைத் தலைவர் உட்பட பல முக்கியஸ்தர்களும் நண்பர்களும் வந்து சிறப்பித்தனர் மாலை இன்னிசை விருந்து நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் தந்திகளும் வந்திருந்தன.

## பிறப்பு

சிதம்பரம்: நடிகத் தோழர் O. N. கிட்டுவின் மனைவியார் 15—8—50 அன்று பெண் குழந்தை பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலம்.

# தங்கத் தட்டில் சாக்கடைப் புழுக்கள்!

# இன்னும் தூங்கினால் என்றுதான் மீட்சி?

## கோவில்பட்டியில் முழங்கினர் வீரர்கள்!

### நெல்லை மாநாட்டின் நிகழ்ச்சிகள்

"வஞ்சனையையே வாழ்வாகக்கொண்ட கும்பல் நம்மை ஏய்த்துச் சுரண்டி, ஏமாளிகளாக்கியே வருகிறது. இந்த இழிநிலை போக்கிட, நாம் எழுந்தாலோ நம்மை அடக்கி அழிக்க முயல்கிறது. அதன் காட்சிதான் வகுப்பு நீதி—சட்டத்தால் பறிக்கப்பட்ட சம்பவம். இந்த அநீதி இனியும் நீடிக்க முடியாது. வளர்ந்துவரும் புத்தெழுச்சி இந்தச் சழக்கர்களுக்குச் சரியான புத்தி போதித்தே தீரும்."

—இரா. நெடுஞ்செழியன்.

"வீண் ஐம்பத்துக்கும், இராணுவத்துக்கும் கோடி கோடியாகக் கொட்டி அழும் இந்திய சர்க்கார்—மக்களை வாழச் செய்யும் உணவுப் பொருளை வெளியிலிருந்து வாங்கித் தராமல் தவிக்கச் செய்கிறது. ஆளவந்தாரின் இந்தக் கண் அவிந்த போக்கை, துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள் மூலம் கண்டித்து மக்களுக்கு, மாணவர்களும் கழக வீரர்களும் விளக்கவேண்டும்."

—கே. ஏ. மதியழகன்.

"காங்கிரசாட்சி ஏழைகளைத் துன்புறுத்தி, சீமான்களுக்குத் தாள் வணங்குகிறது. ஜீவாதாரப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறமை சிறிதும் இல்லை—மக்களைத் திண்டாடச் செய்கிறது. வடநாட்டு அகதிகளுக்கு வசதி செய்து தருகிறது மாகாண சர்க்கார்—ஆனால் தென்னாட்டவர் பசி போக்க தினையளவும் முயல்வதில்லை வடநாட்டு மத்திய சர்க்கார்!"

—என். வி. நடராசன்.

"கஷ்ட நஷ்டங்களினூடே நாம் வளர்ந்து வருகிறோம். மக்களிடையில் நாம் பெற்றிருக்கும் செல்வாக்கு மகத்தானது. பண பலமோ, பத்திரிகை பலமோ இல்லாதிருந்தும் நாம் பெருமிதமாக வளர்ந்துள்ளோம். முன்பிருந்த அமைப்பிலே எல்லா பொறுப்புகளையும் ஒருவர் கையில் ஒப்படைத்திருந்தோம். இப்போது காரியமாற்றும் காளைகளாக மாறியிருக்கிறோம். ஆகவே, நமது பொறுப்பு மகத்தானது! நமது உழைப்பையும் பொறுப்பையும் முதலாக வைத்து பொதுச் சேவை புரியும் நமக்குள்ள கடமையுணர்ச்சி மிக மிக அதிகமானது."

—ஈ. வி. கே. சம்பத்.

"கம்யூனல் ஜி. ஓ. நமது உயிர்நாடி. ஆனால், ஆங்கிலம் நீச பாஷை என்று நமக்கு உபதேசித்து, நம்மை ஏமாளிகளாக்கிய கும்பல், நாமும் முன்னேறத் துவங்கியதைக் கண்டு சதி செய்கிறது—நம்மைத் தாழ்த்தி மிதிக்க தந்திரம் செய்கிறது. இதைத் தடுத்து நிறுத்தவேண்டியவர்கள் நாம்தான்—நமக்கே அந்தப் பொறுப்பு நிறைந்து கிடக்கிறது!"

—இரே. இளம்வழுதி.

"வடநாடு மாகாணங்கள் நம்மை ஏமாற்றுகின்றன. சென்னை அரிசியில்லாமல் திண்டாடிக் கெஞ்ச, ஐக்கிய மாகாண சர்க்கார் தன்னிடம் மீந்து, கெட்டுப்போன அரிசியை அனுப்பியது. இனாமாக அல்ல, இங்கு அரிசி விற்கும் விலையைவிட அதிகமான விலைக்கு! இதன் காரணமாக நமது மாகாண சர்க்கார் கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டமடைந்தனர். இதைப்பற்றி வாய் நடத் திறக்கவில்லை இந்திய சர்க்கார்? இதுதான் ஒரே நாடு என்பதன் இலட்சணமா?"

—என். எஸ். இளங்கோ.

"வடநாட்டு ஏகாதிபத்தியம் வளர்ந்துகொண்டே போகிறது. வடநாடு சோலை — தென்னாடு பாலை! எல்லாத் துறைகளிலும் இன்பத் திராவிடம், விதவைக் கோலமாகியே வருகிறது. விலாவிலே வேல், நெஞ்சிலே ஈட்டி, குடலிலே கொடுவாள்—இந்த வேதனை நிலையைச் சகித்துக் கிடக்க நாம் கோழைகளல்ல! நமது உடலில் ஓடுவது செங்குருதி—வீர இரத்தம். ஆகவே, திடமனதோடு தியாகத் தீயில் நாம் குதிக்கவேண்டிய கட்டம் நெருங்கிவிட்டது."

—இராம. அரங்கண்ணல்.

கோவில்பட்டியிலே கூடியிருந்த நெல்லை மாவட்ட மாநாடு, கழக வரலாற்றிலே அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது. கழக முன்னணி வீரர்களும், இயக்கத்தின் காளைகளும், நாட்டின் நிலை கண்டு குமுறிப்போன இதயங்களோடு கூடிக் கிடந்தனர்.

26-ந் தேதி முதல் நாள் காலை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தமது குழுவினருடன் நாட்டின் கேடுகெட்ட நிலையை விளக்கி, வில்லுப் பாட்டின்மூலம், மக்களுக்குக் கருத்து விருந்தளித்தார்.

மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து மாவட்டக் கழகத்தினரையும் மக்களையும் வரவேற்று, வெற்றிக் களிப்போடு வீரவுரை ஆற்றிய பின்னர் தோழர் டி. கே. சீனுவாசன் நாட்டின் நிலைமையையும் நமது கடமையையும் விளக்கி வீர முழக்கமிட்டு, மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

மீண்டும் பிற்பகலில் மாநாடு துவங்கியதும், திருவாரூர் தோழர் மு. கருணாநிதியை மாநாட்டின் தலைவராக, வரவேற்புக் கழகத் தலைவர் பிரேரேபித்தார். அதை ஆமோதித்து தோழர்கள் எம். எஸ். இராமசாமி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, கே. ஏ. மதியழகன், இளம்வழுதி, என். எஸ். இளங்கோ, எம். எஸ். சிவசாமி, பராங்குசம், கண்ணதாசன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, ஈ. வி. கே. சம்பத், தில்லை-வில்லாளன், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர். கருணாநிதி இயக்கத்துக்கு ஆற்றிவரும் தொண்டின் சிறப்பையும், சிறு வயதிலிருந்தே கழகத்துக்காக அவர் பாடுபட்டு வரும் வீரரென்றும், மாணவர் கழகத்தைத் துவக்கிய பெருமையுடையவரென்றும், நெஞ்சில் பட்டதைத் தயங்காது உரைப்பவரென்றும், ஆமோதித்துப் பேசிய தோழர்கள் அவரைப் பாராட்டி தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

தோழர் மு. கருணாநிதி, தலைமை தாங்கி, கழகத்தவர் சாதித்திருக்கும் காரியங்களை விளக்கி நமது பொறுப்பு வளர்ந்திருக்கிறதென்றும், அவைகளைச் சாதித்து வெற்றி பெற, கழகம் 'இரும்புக் கோட்டை'யாக விளங்கவேண்டும் என்றும் முழக்கமிட்டார்.

முதல் நாள் இரவு நெல்லைக் கல்லூரி மாணவர்களின் "இலட்சிய வீரன்" என்ற புரட்சி நாடகம், வெகு விமரிசையாக, மக்கள் பாராட்டுதலோடு நடைபெற்றது. நாடகத்துக்குத் தலைமை வகித்த அருப்புக்கோட்டை எம். எஸ். ராமசாமி மாணவத் தோழர்களையும் நாடகத்தையும் பாராட்டிப் பேசினர்.

### இரண்டாவது நாள்

ஞாயிறு காலை நாகூர் இசைமன்னர் ஹனீபா தம் இசைக் குழுவினரோடு, வீணைக் குயிலெடுத்து இயக்கப்பாடல்களைப் பாடி மாநாட்டு மக்களின் மனதைக் கவர்ந்தார்.

பின் நடிகமணி தோழர், டி. வி. நாராயணசாமி நாட்டுப்பண் பாடியதும், மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி துவங்கியது. தோழர்கள் இராம. அரங்கண்ணல், என். வி. நடராசன், இரெ. இளம்வழுதி, ஈ. வி. கே. சம்பத் கே. ஏ. மதியழகன் ஆகியோர் நாட்டுப் பிரச்சினைகள் குறித்தும், வகுப்புவாரி சமநீதிக் கிளர்ச்சி பற்றியும், உணவுத்திண்டாட்டம் குறித்தும் விளக்கமாகப் பேசினர்.

### மாலைமணிக்கு பாராட்டு

தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசுகையில் கழகத்திலுள்ளோரின் பொறுப்பு குறித்து, விளக்கிப் பேசினர். அது போது சங்கடம், சஞ்சலம் ஆகியவைகளுடனேயே நாம் கழகத்தை வளர்த்து வருகிறோம் எனக் குறிப்பிட்டுக் கூறுகையில், "ஓராண்டுக்கு முன், திடீரெனத் தினசரிப் பத்திரிகை வேண்டுமே, என் செய்வது? என்று கலங்கினோம். உடனடியாக ஆரம்பிக்கும் வசதியில்லாதவர்களாக இருந்தோம். நமது உழைப்பையும் அதன் வாயிலாகக் கிடைத்த ஊதியத்தையும் பிரிந்த இடத்திற்குத் தந்துவிட்டு வந்தோம். அப்போது, நமது கருத்துக்களை வெளியிடத் தினசரி துவக்கி பேருதவி புரிய சென்னைத் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் முன்வந்து, கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் நடத்திவந்தார்கள். அவர்கள் நமக்குச் செய்த இந்தப் பேருதவிக்கு நாம் கடமைப்பட்டவர்கள். அவர்களுக்கு நமது நன்றி" என்று குறிப்பிட்டார்.

### மாநாட்டில் திருமணம்

பின் தோழர் அன்பானந்தன் தோழியர் மல்லிகா வாழ்க்கை ஒப்பந்தம், கோவில்பட்டி நகரசபைத் தலைவரும் மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவருமான தோழர். ஈ. வி. ஏ. வள்ளிமுத்து தலைமையில் நடைபெற்றது.

பிற்பகலில் மீண்டும் மாநாடு கூடியதும் தோழர் என். எஸ். இளங்கோ, உணவுப் பிரச்சினையை எவ்வளவு மோசமாகி விட்டது காங்கிரசாட்சி என்று விளக்கி, வீர உரை ஆற்றினர்.

பின் காரைக்குடி தோழர் கண்ணதாசன், நாட்டுமக்களை அறை கூவி அழைக்கும் வகையில்,

"சிங்கக் குகையில் சிறுநரிக் கூட்டம்
தங்கத் தட்டில் சாக்கடைப் புழுக்கள்
செந்நெல் வயலில் நீருறு காளான்
வண்ணத் தமிழரின் மனையிலே ஆரியம்
இன்னும் தூங்கினால் என்று தான் மீட்சி"

என்று, நீண்ட கவிதை (கவிதை "பொன்னி" இதழில் வருகிறது) யொன்றின் மூலம் எல்லோரும் வாரீர் நாட்டுப் போருக்கு என்று அறைகூவி அழைத்தார்.

நெல்லை இந்துக்கல்லூரி மாணவர் அலிஷேக் மன்சூர், தென்னாட்டு முஸ்லிம்கள் திராவிடமுன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றவேண்டும் என்று விளக்கிப்பேசினர்.

பிறகு மு. சிதம்பரபாண்டி என்னும் சிறுவன் சிறிதுநேரம் பேசிய பிறகு, மாநாட்டில் நாட்டுப் பிரச்சினைகள் சம்பந்தமானபல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடைசி தீர்மானமான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நீடிக்கவேண்டும் என்பதை விளக்கி தோழர் இரா. நெடுஞ்செழியன் வீரமிகுந்த உருக்கமான சொற்பொழிவாற்றினர். கடைசியாக பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, பேசியதும்

(6-ம் பக்கம் பார்க்க)

**14—9—50 வியாழன்**
**காலை 10 மணிக்கு**

வடஆற்காடு—திருப்பத்தூர் தாலுகா

**ஆண்டியப்பனூரில்**

**D. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.**

**அல்லிராணி**

**வாழ்க்கை ஒப்பந்தம்**

நடைபெறும்

**சி. என். அண்ணாதுரை**
**ஈ. வி. கே. சம்பத்**

பேசுவர்.

திராவிடநாடு

ஞாயிறு] 10—9—50 [காஞ்சி

# மீண்டும் காமராசர்!

★

"என் வந்தீர்?"

"எல்லாம் உன் நன்மைக்குத்தான்!"

"என்ன...?"

"புரியவில்லையா?"

"உள்ளே வந்து புகுந்துகொண்டதுமல்லாமல், புதிர் போடுகிறீர்?"

"சத்தம் போடாதே, சரசாங்கி! எனக்கென்னமோ இதிலெல்லாம் துளியும் ஆசையில்லை. பத்தாண்டுகளாக அனுபவித்துக் களைத்தவன்—ஆனாலும் எதிர்த்த வீட்டு ஏகாம்பரம் என்னோடு போட்டி போட்டான். எனக்கு வந்துவிட்டதே கோபம்-உடனேதான் இருந்த வலுவையெல்லாம் திரட்டி உருட்டிவிட்டு மதிலேறிக்குதித்து இங்கு வந்தேன்"

"அவன் போட்டி போட, நான் பலியாவதா?"

"இல்லை, கண்ணே உன் தாயின் வேண்டுகோள் படித்தானே வந்தேன்"

"ஓகோ..."

"பிகுவு பண்ணாதே, மூன்றாவது வீட்டு முத்தம்மா எவ்வளவு அழகு-அவள் எனக்காக ஏங்கித் தவித்தாள், வேண்டாமென்று வெறுத்தொதுக்கிவிட்டேன். நான் நினைத்தால் இன்றைக்குக் கூட முத்தம்மாள் கிடைப்பாள்!"

நள்ளிரவில் உள்ளே நுழைந்தவன், நடுங்கும் குரலில், நாக்குக்குப் பேச்சுக்குமே சம்மந்தமில்லாமல் பேசுவதும், பிறகு காசை வீசுவதும் வெளியேறுவதும் அவளுக்குப் புதிதல்ல—இன்று வந்தவன் அவளுக்கு அறிமுகமானவன்! எனினும் இனித் திரும்பப் போவதில்லை யென்று உரக்கக் கூவி வெளியில் சென்றவன், வேலப்பன். அவன் மீண்டும் வந்து, வந்ததற்குக் காரணம், அவள் நன்மைக்காம், போட்டியிட்டானும் எதிர்வீட்டுக்காரன், அவள் தாய் வேண்டிக்கொண்டாளாம், அவள் பிடிவாதம் செய்யக்கூடாதாம், முத்தம்மாவின் மோகனப் புன்னகை கண்டும் மயங்காமல் அங்கு வந்துள்ளானாம்—இதைக் கேட்டு அவள் சிரித்தாள்! அவனே தான் இட்டு கட்டிய கதையை அவள் நம்பிவிட்டாள் என்று எண்ணிக் குதித்தான்!!

* * *

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தேர்தலில் மீண்டும் காமராசரே, தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தோழர் சுப்பையா மீண்டும் தோற்றார்!

காமராசர் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவராக பல ஆண்டுகள் இருந்துவிட்டார். எனினும் அந்த ஆசை அவரை விடவில்லை. போட்டியில் கலந்துகொண்டார். வெற்றியுங் கண்டார்.

அவர் வெற்றி பெற்றதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை. ஏக போக சொத்தாக, காங்கிரசின் தலைமை பீடத்தை அவர் அனுபவித்து வருகிறார். ஆகவே தன்னை ஆதரிக்கவே ஒரு கூட்டத்தை உற்பத்தி செய்ய அவரால் முடியும். அவர் இதற்காக காங்கிரஸ் பஞ்சாயத்து, டெலிகேட் தேர்தல்களில்கூடக் கண்ணுங் கருத்துமாகத் தன் பக்கம் நிற்கும் தோழர்களை நிற்கவும், தேர்ந்தெடுக்கவும் உழைத்தார். ஆகவேதான் காமராசர் தலைவராக வந்தார்.

காங்கிரசிலே இன்று கண்ணியமோ, தியாக உணர்ச்சியோ, மக்கள் நன்மைக்கு உழைக்க வேண்டும் என்ற நல்லெண்ணமோ, துளியுமில்லை. பதவி வெறியர்கள் தாங்கள் ஏறிச்செல்லும் படிக்கட்டுகளாக காங்கிரசிலுள்ள நிர்வாகப் பதவிகள் என்று கணக்குப்போட்டு, இடந்தேடிக் குவிந்துள்ளனர். அவர்களுக்கு ருசி காட்டிவிட்டார், சிறு சிறு உதவிகளின்மூலம், தனது செல்வாக்கைப்பயன்படுத்தி — ருசிகண்ட பூனை, உரியைச் சுற்றிவராமல் போகுமா? ஆகவேதான் காமராசரைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர்

காமராசர், பத்தாண்டுகள் தலைவராக இருந்தும், பதவி தாகந்தீரவில்லை. தலைவர் பீடத்தை விட்டிறங்க மனமில்லாமல் மாய் மாலங்கள் பல புரிந்து மீண்டும் தலைவராக வந்துவிட்டார்.

வெற்றிகண்ட காமராசர் பேசுகிற பேச்சுதான் மிக வேடிக்கையாக இருக்கிறது — விபரீதம் தொனிக்கிறது-வேதனைகீதமும் கேட்கிறது! வேசி வீட்டில் நுழைந்த வேலப்பன்போலப் பேசுகிறார் காமராஜர்.

காங்கிரஸ் தலைவர் பதவி ஏதோ பெரிய பதவியல்ல.

ஏதோ அடுத்தடுத்து பெரிய பதவிகளுக்குப்போக இது அஸ்திவாரப் பதவி என்று யாராவது நினைத்தால் தவறாகும்.

இந்த பாரத்தை எப்பொழுது கீழே வைத்துவிட்டுப் போகலாம் என்றுதான் இருந்தேன்

நண்பர்கள் வற்புறுத்தினார்கள் இதர காங்கிரஸ்வாதிகளும் அப்படியே வற்புறுத்தினர் தமிழ்நாட்டு மக்களும் வேண்டிக்கொண்டனர்.

சிலர் எதிர்த்தனர். அதற்காகவே நின்றேன் போட்டியில் ஒருவனாக!

எனக்குப் பதவி ஆசை கிடையவே கிடையாது

மந்திரியாக வேண்டுமானால் எப்பொழுதே வந்திருப்பேன். அப்பதவி எனக்காகக் காத்திருந்தது.

காமராசர் சிந்திய மணிமொழிகளைப் பார்த்தால் அர்த்தராத்திரியில், 'பழையபத்தினி' வீட்டில் நுழைந்த வேலப்பன்தான் நினைவிற்கு வருகிறான்.

தொல்லைகள் நிறைந்தது, தலைவர் பீடமென்றால், இவர் ஏன் தூக்கணாங்குருவி போலத் தொங்கிக்கொண்டே இருக்கவேண்டும்? அடுத்த பெரிய பதவிகளுக்குப் போக இந்தத் தலைவர் பதவி வழியாக அமையவில்லை என்று கூறுகிறார் அவர் ஆனால் அவரே கூறுகிறார் மந்திரிபதவிஎனக்காகக் காத்திருந்தது. நான்தான் தள்ளிவிட்டேன் என்று! அந்தப் பதவி எதற்காக காத்திருந்தது? எந்தத் தகுதியால், எந்தத் திறமையால இவரை அண்டிவந்து மண்டிபோட்டுக் காத்துக் கிடந்தது என்று நமக்குப் புரியவில்லை. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் என்பதைத் தவிர, வேறு காரணம் ஏதாவது உண்டா? இந்த பாரத்தை விட்டுவிடத் துடித்த இவர், பல ஆண்டுகள தொல்லைகளுக்கிடையே இப்பதவியை வகித்துவந்த இவர், சிலர் எதிர்க்கிறார்கள், அவர்களை அடக்கவேண்டும் என்று கூறித் தேர்தலில் நின்றாரென்றால் காங்கிரசின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை துளியாவது இல்லையென்பதுதானே புலப்படுகிறது! காங்கிரசிலே பெரும் பிளவுகள் ஏற்படும் என்ற எண்ணமிருந்தால், கண்ணியமாக விலகியிருக்கலாம். அதனைச் செய்யாதது மட்டுமல்ல — எதிர்த்து நின்றவர்களுக்கு உபதேசம்புரியும் முறையில், உறங்கிக் கிடக்கும் கோபத்தைக் கிளறுகிறார். புதியதொரு கோஷ்டி புறப்படட்டும் என்பது போல தோற்றவர்களைத் தூண்டி விட்டிருக்கிறார்.

காலம் மாறியிருக்கிறது என்பதை காமராசர் உணரவேண்டும். அதை விடுத்து மக்கள் மதி இருண்டு கிடக்கிறார்கள் என்று தவறுதலாகக் கணக்குப் போட்டுக்கொண்டு பேசுவது நல்லதுமல்ல—நாட்டவர் சிரிப்பதற்கே, பயன்படும்!

நண்பர்கள் வேண்டிக்கொண்டார்கள், நாடே கேட்டுக்கொண்டது என்கிறார் காமராசர். ஆனால் இவருக்குக் கிடைத்தது 155 வாக்குரிமைகள், எதிர்த்து நின்ற தோழர் சுப்பையாவுக்கு 99 வாக்குரிமைகள் கிடைத்துள்ளன! தமிழ்நாட்டு மக்களின் வேண்டுகோள்படி வந்தவருக்கு ஏன் இவ்வளவு எதிர்ப்பு என்று கேட்கமாட்டார்களா?

காமராசர் கணக்கு தவறு—மக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள். பதவி ஆசை இல்லாதவர், பதவியினாலும் பலனில்லை, மந்திரிப் பதவியையே உதறித் தள்ளியவர் என்று அவரே தனது தகுதி அட்டவணையை நீட்டினாலும் சிரிப்பார்கள்-பிறகு அவர் போட்டியிட்டதற்குக் காட்டியுள்ள காரணங்களைக் கேட்டால்!

வேலப்பன்கூட அப்படித்தான் பேசினான். 'எனக்கு ஆசையில்லை, நீ தரும் சுகத்திலும் நாட்டமில்லை. உன் தாய் அழைத்தாள். எதிர் வீட்டு ஏகாம்பரம் போட்டி போட்டான். மூன்றாம் வீட்டு முத்தம்மாள் அழைத்தாள்......' இப்படியெல்லாம்! காம வெறி கருத்தை மறைக்க கண்டபடி உளறினான். பதவி போதையும் அப்படித்தானோ என்று சந்தேகிக்க வைக்கிறது, காமராசரின் வெற்றிப் பேச்சு!

மீண்டும் வெற்றி பெற்ற காமராசர், வெற்றிக் களிப்பில் விவேகத்தைத் தள்ளி வைக்காது, நாட்டு மக்களின் சிந்தனை வளர்ந்துள்ளது என்பதை நினைவில் நிறுத்திப் பேசிடவேண்டும். பதவி யாசையே இல்லாத காமராசர், 'துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்' புரியத்தான் மீண்டும் தலைவரானார் என்பதை நம்பிடும் காலம் போய் விட்டது. அதனைக் கவனத்தில் வைத்து, போட்ட கணக்கு பிழையுடையது என்பதை யுணர்ந்து புதுக் கணக்கு போட்டுப் பேசிடவேண்டும்.

ஆனால் காமராசராகட்டும், சுப்பையாவாகட்டும்—எவர் வந்தாலும், இடிந்து வரும் காங்கிரஸ் கோட்டையை எத்தனை நாள் தாங்கி நிற்கமுடியும் என்றுதான் மக்கள் கேட்கின்றனர். மதியுள்ளோர் கேட்கின்றனர். நாட்டு நலம் விரும்பிகள் யாவரும் ஒரு முகமாக, ஒரு குரலில் கேட்கின்றனர் — மீண்டும் தலைவராக வந்துள்ள 'பதவி ஆசையே இல்லாத' காமராசரை!!

✻

1-ம் பக்கத் தொடர்ச்சி

னையோ, அந்த சுகபோக பூமியில் நுழைபவர் யார் என்று அறிந்துகொள்வதிலே மக்கள் ஆர்வங் காட்டுவதிலே வியப்பில்லை.

தாண்டன் தலைவரானார். அவரது உள்ளத்தில் புதைந்து, ஆனால் சில சில சமயங்கள் தலை நீட்டிய குறுகிய மனப்பான்மை கொண்ட திட்டங்களைத் திணிக்க முயலப் போகிறார். ஆனாந் தலைவர், அவரது கட்சித் தலைவரோடு மோதப் போகிறார். அப்பொழுது காங்கிரஸ் இப்பொழுது சிதைகிற வேகத்தை விட அதிகமாக அழிவை நோக்கி ஓடப்போகிறது.

தாண்டன் தலைவர் — காங்கிரசுக்கு! ஆம், இனித்தான் காங்கிரஸ் தாண்ட முடியாத நெருக்கடிக் காண்டங்கள் நிறைய உள்ளன. நினைவிலிருக்கட்டும்.

✻

## சென்னை ராயப்பேட்டையில்

13—9—50 மாலை, ராயப்பேட்டையைச் சேர்ந்த புதுப்பேட்டை தி. மு. க. துவக்கவிழா.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, சொற்பொழிவாற்றுவர்.

ஜே. முனுசாமி செயலாளர்.

## பொன்மலை கழக வழக்கு

பொன்மலைத் திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தையும், பணத்தையும் கைப்பற்ற சிலர் செய்த முயற்சியின்காரணமாக ஏற்பட்ட இ. பி. கோ. 145 சட்டப்படி வழக்கு 28-8—50 திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் நடைபெற்றது. நம்தரப்பில் வக்கீலாக தோழர் வைத்திலிங்கம் பி. ஏ., பி. எல்., ஆஜரானார். எதிர் தரப்பு முக்கியசாட்சி வராத காரணத்தினால் வழக்கு 14—9—50ல் திருவரம்பூர் கேம்ப்பிற்கு ஒத்தி போடப்பட்டிருக்கிறது எனக் கழகச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி தெரிவிக்கிறார்.

## புதிய வெளியீடுகள்

✻

**பெண்** இராதாமணாளன். 0—8—0
கணவன் அன்பைப்பெற கோவில் பட்டரின் தயவை நாடியது கற்பகத்தின் பெண் மனம். அதன் பலன் ஒரு காம வெறியனின் பிடியில் சிக்குண்டு தவித்தாள்.

**லீலாராணி** ரா. தணலன். 0—8—0
ஒரு காம வெறிபிடித்த செல்வச் சீமாட்டியின் கதை. அவள் காமத்தின் எல்லையைக் காண முயன்றாள். ஆண் இனம் முழுவதும் தன் அடிமை என்று எண்ணினால். ஆனால் அவள் முடிவு பரிதாபமாய் இருந்தது.

**ரஷ்யப் பிரச்சினை** 1—4—0
ஸ்டாலின் பரிசு பெற்ற நாவல். அமெரிக்க ரஷ்ய மனோபாவங்களை நன்றாக விளக்குகிறது. இஸ்மத் பாஷா மொழி பெயர்ப்பு.

**மா. சே. துங்.** குயிலன். 0—8—0
செஞ்சீன பிரதமரின் புரட்சி நிறைந்த வாழ்க்கை வரலாறு.

குறிப்பு:— விணிகர்க்கு எல்லாப் புத்தகங்களுக்கும் 20% சத விகிதம் கழிவு உண்டு. அனுப்பும் செலவு எங்களைச் சேர்ந்தது. ஐந்து ரூபாய்க்கு குறைந்த ஆர்டர்களுக்கு செலவு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.]

**பாரி நிலையம்**
59, பிராட்வே, சென்னை 1.

# அரும்பி வருகிறது பிரிவினை உணர்ச்சி

## எத்தன்—ஏமாளி நட்பு நாடகம்

### வெட்கம் துக்கத்தைப் போக்காது

### சிறுபொறி பெருநெருப்பாகும்

அவன் நல்ல உழைப்பாளி—சிறந்த செல்வவான். அவனிடம் இல்லாதது எதுவுமில்லை. ஏதாவது இல்லையென்றாலும் உடனே, கிடைக்கும் இடத்திலிருந்து வாங்க முடியும் அவனால்.

மாடுபோல உழைப்பதால் மடியில் நிறையப் பணம். வயல் விளைந்து தந்த பணம். தோட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம். பூமியிலிருந்து எடுக்கப்படும் தங்கம், வெள்ளி—அது குவிக்கும் செல்வம். எல்லாம் உண்டு அவனுக்கு! ஆனால் அவை எதுவும் அவனுக்குப் பிரயோசனப்படுவதில்லை!

காரணம் எத்தன் — அவைகளை அடித்துக் கொண்டு போய்விடுவான்! கத்தியைக் காட்டியோ துப்பாக்கியை நீட்டியோ அல்ல, எத்தன் ஏமாற்றம் திறத்தால்!

இலேசான சிரிப்பு, நயமான பேச்சு—ஏமாந்து விடுவான், ஏமாளி! ஏமாளியின் சொத்து, தன் வீட்டுக்கு வர எத்தன் கையாள்வது அட்டகாச முறைகளை அல்ல—நய வஞ்சகம் நிறைந்த நட்பை!

பலாத்கார முறைகள் கூட எத்தனுக்குத் தேவையில்லை—அதைவிடப் பசப்பு மொழிகளே, ஏமாளியிடமிருந்து செல்வத்தைக் கொட்டித் தரும் சுலபமான வழி.

உழைத்துச் சேர்க்கும் செல்வத்தையும், வயல் தரும் வருமானத்தையும்—கொட்டிக் கொள்ள எத்தன் சிறிதுகூடச் சிரத்தை எடுக்க வேண்டியதில்லை!

ஏனெனில், எத்தன் கேட்கவேண்டுமேயெனக் காத்திருக்க மாட்டான், ஏமாளி!!

வர, வர, கொண்டுபோய் குவித்துக் கொண்டே இருப்பான், எத்தன் வீட்டில்.

'என்னப்பா — ஏமாளியாகிறாயே! எல்லாம் உன் பொருள். அதை, எவன் வீட்டிலோ கொண்டுபோய் கொட்டுகிறாயே!' என்றுகேட்டால், சில சமயம் அவர்களை ஏமாளி கோபித்துக்கொள்வான். இன்னும் சில சமயங்களில் புன் சிரிப்போடு போய்விடுவான்.

அந்தப் புன்சிரிப்பின் பொருள்:-"போக்கத்தவன் — புத்தியில்லாதவன்! நான் செய்வதில் பொதிந்திருக்கும் பொருள் என்ன தெரியும்? எத்தனும் நானும் எவ்வளவு அன்யோன்யமாக வாழ்கிறோம். ஒற்றுமைக்கு முன்னர் உயர்ந்ததுமுண்டோ?" என்பதுதான்.

ஏமாளி—ஒற்றுமை பேசுவான்! எத்தனும்—பேசுவது ஒற்றுமைதான்!! ஆனால், இந்த "ஒற்றுமைக்கு இருவரும் காணும் பொருள், வெவ்வேறானது! அந்த உண்மை விளக்கம், வெளியாகும் ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதல்ல. எத்தனையோ தடவைகள் ஏற்பட்டதுண்டு. ஆனால், இந்தத் தடவைதான் அது சிறிது தைத்தது, ஏமாளிக்கு!

இப்போது நாட்டிலே ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடிதான் — அத்தகைய உண்மை விளக்கம் தந்த, சந்தர்ப்பம்.

தென்னாடு—செல்வம் கொழித்த திருநாடு. தான் வாழ, தன் மக்கள் வாழ, இல்லாததைப் பெற்றுவாழ—எல்லா வசதிகளையும் பெற்றுத் திகழும் இன்பபூமி.

ஆனால், அதை ஆட்டிப்படைப்பவர்கள் ஏமாளியின் நிலையிலிருக்கிற காரணத்தால்—இன்று அல்லல் படுகிறது! எல்லாவற்றிற்கும் திண்டாடுகிறது!! தென்னாட்டு மக்களிடையே, பசியென்ற கூச்சலும், பதைக்கிறோம் என்ற பரிதாப அழுகையும் நிறைந்து கிடக்கிறது!!!

வளம் நிறைந்த பூமி-தனது வருமானங்களை எல்லாம் வடநாட்டுக்குக் கொட்டிக் குவித்து வருகிறது.

வருமானங்களை மட்டுமல்ல, தான் வாழ்வதற்குத் தன்னிடம் இருக்கவேண்டிய அதிகாரங்களை எல்லாம் டெல்லிக்குச் சமர்ப்பித்து வருகிறது.

வசதி நிரம்பியவன்—ஆனால், ஏமாளி!

அதே நிலையில் இருக்கிறது, நம் நாடு!! ஒற்றுமை, ஐக்கியம், ஒரே நாடு—என்ற போலிப் பேச்சால் தென்னாடு, வடநாட்டுக்கு அடிமையாகி வருகிறது.

பெரிய பண்ணை என்று நம்பி, கையில் கிடப்பதை எல்லாம் கொண்டுபோய்க் கொடுப்பார்கள்-கிராமங்களிலுள்ள மக்கள். கிடைக்கும்போது கொடுத்து வைத்தால், வேண்டும்போது வாங்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன்.

அதே போல, மாகாண சர்க்காரும் மத்திய சர்க்காரை நினைத்துக் கிடக்கிறது!

பெரிய பண்ணைகள்—கிடைக்கும் பணத்தை, மங்கைகள் காலணிக்கும், மதுரமொழி நங்கைகள் புன்சிரிப்புக்கும் வீணாக்கிவிட்டு—நம்பிக் கொடுத்தான், கேட்கும்போது விரட்டுவார்கள், அதிகாரக் குரலோடு அதட்டுவார்கள்!

அதேபோல, "ஐக்கியம்" என்ற ஆசைப் பேச்சுக்கு ஆட்பட்டுக் கிடக்கும் மாகாணத்தின் கதியும் ஆகிவருகிறது!

"இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும்—எல்லோரும் இந்தியர்கள். இமயமுதல் குமரிவரை வாழும் எல்லோரும் பாரத மாதாவின் புதல்வர்கள். எல்லோரும் ஓர் இனம்—இந்நாட்டு மக்கள்! ஐக்கியமே நமது சுகவாழ்வு!!" என்ற இச்சகப் பேச்சுக்கு, இங்குள்ளோர், ஆட்பட்டுக் கிடப்பதால், எல்லா அதிகாரங்களையும் வடநாட்டு மத்திய சர்க்காரிடம் கொட்டிக் குவிக்கப்பட்டிருக்கிறது.

முக்கிய வருமானங்கள், ஒரே நாடாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு ஆட்பட்ட காரணத்தால், மத்திய சர்க்காருக்கு அனுப்பப்படுகின்றன.

இந்திய சர்க்கார் பலமுள்ளதாக இருக்க வேண்டும்—அதுவே நமக்கெல்லாம் பெருமை என்ற ஆசையால், முக்கிய அதிகாரங்கள் யாவும் மத்திய சர்க்கார் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் காரணமாக முப்பது கோடி மக்கள் நிரம்பிய, இந்தப் பரந்த உபகண்டம் டெல்லியிலுள்ள ஆட்சியினர் வசம் ஆட்பட்டுக்கிடக்கிறது.

இந்தியா ஒரு நாடு அல்ல—பல நாடுகளைக் கொண்ட ஒரு பரந்த உபகண்டம்.

பலஇன கலாச்சார மக்கள்வாழும் ஒருபெரிய நிலப்பரப்பு. அதை, ஒரே ஆட்சி ஆள்வதென்பது இயலாது என்று நாம் கூறி வருகிறோம். ஏக இந்தியா என்றபேச்சால், பரந்த உபகண்டத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பயன் விளைய முடியாது என்று சொல்லி வருகிறோம்.

கிராம மக்கள் போல, நாமும், பண்ணைக்காரன் போல வடநாடும் ஆவது நல்லதல்ல—வடநாட்டாட்சி தன் சுகங்களைக் கவனிக்குமே அல்லாது மாகாண சர்க்காரின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது. செய்வதும் சாத்தியமல்ல, என்று தக்க ஆதாரங்களோடு விளக்கினோம். விளக்கி வருகிறோம்.

ஏமாளியாகாதீர்! எத்தனுக்கிடாதீர், வடநாட்டை!! என்று, கூறி வருகிறோம். ஆனால், நம் கூற்றுக்கண்டு கேலிச் சிரிப்பை வீசினர்-கோபக் கண்களைக் காட்டினர், இங்குள்ள தேசிய இயக்கத்தவர்கள்.

தேசிய இயக்கத்தவருக்கு, இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும் என்ற ஆசை பலமானதற்குக் காரணம் எல்லோரும் அறிந்ததுதான்.

சுயராஜ்யப் போரில், வெளிநாட்டாரை வெளியேற்ற எல்லோரும் ஒரே கட்சியின் தலைமையில் சேர்ந்து உழைத்தனர்.

அந்தக் கூட்டு உழைப்பின் பலனாக ஏற்பட்ட அன்யோன்யத்தைச் சுலபத்தில் அறுத்துக் கொள்வதென்றால்—துடிக்கின்றனர்.

மூடனை விரட்ட எத்தனிடம்கட்டுக்கொண்டால், எப்போதும் அது நீடிப்பது நல்லதல்ல—என்பதை உணர மறுக்கின்றனர்.

உணரும் நிலையேற்பட்டாலும், அதை வெளிக்குக் காட்டிக்கொள்ள வெட்கப்படுகின்றனர்.

புது இந்திய அரசியலமைப்புச் சட்டமான பின்னர் இந்த இக்கட்டான நிலை, சென்னை மாகாணத்துக்கு அதிகமாகி வருகிறது.

சர்க்கார் என்று ஒன்றுஇருந்தால்,தன்மக்களுக்கான நன்மைகளை யெல்லாம் செய்து தருவதற்கான அதிகாரங்கள் அதன்வசம் இருக்கவேண்டும்.

ஆனால், இந்தியா ஒரே நாடு என்ற ஆசைக்கு அடிமைப்பட்டதால் மத்திய சர்க்கார்வசமே அதிகாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன — மாகாண சர்க்காரின் அதிகாரங்கள், குறைபாடப்பட்டிருக்கின்றன.

இது ஆபத்து, நல்லதல்ல, என்று நாம் எச்சரித்தோம்! கேலியைப் பதிலாகத் தந்தனர், தேசியத் தோழர்கள்—நமது சகோதரர்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

# எழுத்துரிமையைப் பறிக்காதே!

## ஏடெழுதியதில் குற்றமில்லை

### புலவர் செல்வராஜ் வழக்கில் தீர்ப்பு

"கருப்புச் சட்டை ஒழியவேண்டுமா?" என்ற ஒரு சிறுநூல் எழுதிய குற்றத்திற்காக புலவர் செல்வராஜ் ('வியாழன்') மீது வழக்குத்தொடுத்தது, சென்னை அரசாங்கம்.

புலவர் செல்வராஜ் எழுத்துலகத்திற்கு புதியவரல்ல—நெடுநாள் பழகி நீண்ட அனுபவச்செல்வத்தைச் சொந்தமாக்கிக் கொண்டவர். 'திராவிடன்' 'விடுதலை' 'கதிரவன்' 'நூருல் இஸ்லாம்' போன்ற இதழ்களில் ஆசிரியராக அமர்ந்து பணியாற்றியுள்ளவர். தமிழ்ப்புலமையும், இந்தி, வடமொழி ஆகியவற்றில் பயிற்சியுமுள்ளவர். திராவிடஇயக்கத்தில் அவர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது.

அவர் எழுதிய சிறுநூல்—'கருப்புச்சட்டை ஒழியவேண்டுமா?' என்பது! சமுகத்தில் 'பேயாட்டம்' போடும் சில ஊழல்களை எடுத்துக்காட்டி, அவை ஒழியவேண்டும் என்று எழுதியதற்காக அவர்மீது குற்றம் சுமத்தி, எதற்கும் அவசரப்படும் சர்க்கார் வழக்குப் பதிவு செய்தது.

ஒன்பது மாதங்கள் ஓயாத விசாரணை—ஒத்திவைப்பு-விசாரணைஎன்று வழக்கு ஊஞ்சலாட்டமாடிற்று. கடைசியில் வழக்கை விசாரணை செய்த சென்னை முதல்மாகாண மாஜிஸ்ட்ரேட், குற்றமற்றவர் நூலாசிரியர் என்று விடுதலை செய்தார்.

நீதி நிலைத்தது—நேர்மை வென்றது கண்டு மகிழ்கிறோம். வெற்றிகண்ட புலவர் செல்வராஜுவைப் பாராட்டுகிறோம். எழுத்துரிமையைப் பறித்திடத் துடிக்கும் சர்க்காருக்கு இந்த வழக்கின் தீர்ப்பைக் காணிக்கையாக்கி அதிகார மதுவால் மயங்கிக்கிடக்கும் அவர்களைக் கண்களைத்திறந்து பாருங்கள் என்று வேண்டுகிறோம்.

# ★ கனவில் 'கனம்'கள்! ★

பெரிய மண்டபம் — நிசப்தம் குடிகொண்டிருந்தது. நான் நடந்து சென்றேன். மண்டபத்தினுள் நுழைய வேண்டும் என்ற அவா தலை தூக்கி நின்றது—ஆகவே உள்ளே நுழைந்தேன். ஒரு பெரிய தாழ்வாரம்—அதன் பிறகு வரி வரியாக நாற்காலிகள் போடப்பட்டிருந்த இடத்தினுள்ளும் புகுந்து சென்றேன். எங்கும் மனித அரவமே இல்லை. மேலும் நடந்தேன். பேச்சு குரல் கேட்டது. குரல் மட்டுந்தான்—சொற்கள் புரியவில்லை. அந்தப் பேச்சின் சாரத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என நெருங்கினேன்.

பேச்சு தெளிவாக என் காதுகளில் விழுந்தது.

"வாங்க, கனம்"

"வர்ரேன், மகாகனம்"

"கனமும், கனமும் சேர்ந்து என்ன செய்வது? நாம் செய்ய முடியாததை—செய்வதிருக்கட்டும், பேச முடியாததை, சாதாரண 'இலேசுகள்' செய்ய முனைந்துவிட்டனர்!"

"புரியவில்லையே, எனக்கு"

"நாடாளும் மந்திரிகளிலே நீரும் ஒருவர்—நாட்டின் கொந்தளிப்பை அறிய முடியவில்லை."

"கத்தாமல், காரியத்திற்கானதைப் பேசுமே—கேட்போம்"

"கருப்புக்கொடி பிடிக்கப் போகிறார்கள்—கருப்புக் கொடி ஓய், கருப்புக் கொடி!"

"யார்?"

"திராவிட முன்னேற்றக் கழகத்தார் — கோவில்பட்டியில் கூடிய மாநாட்டில், இனி வடநாட்டு மந்திரிமார்கள் இங்குவந்தால் கருப்புக் கொடி காட்டி, வெறுப்பைக் காட்டுவதுன்னு தீர்மானம் போட்டிருக்கிறார்கள்"

"ஏனும்..."

"என்னை ஏன் கேட்கிறீர்—உமக்குத் தெரியாதா?"

"விஷயமே, நீர் சொல்லித்தான் தெரிகிறது—காரணம் எப்படி எனக்குத் தெரிய முடியும்?"

"வடநாட்டு ஆதிக்கம் கூடாது என்பதுதான் அவர்கள் அடிப்படைக் கொள்கை"

"எனக்கென்னமோ, அது மட்டும் சரின்னுதான் படுகிறது. உள்ளுக்குள்ளே 'அவர்கள் பேசுவதையெல்லாம் ஒத்துக்கொள் என்றுதான் ஏதோ ஒரு குரல் சொல்லிக்கொண்டே இருக்கிறது."

"உமக்கு மட்டுந்தானா? மந்திரிகளாக இருக்கிற எல்லாருக்குந்தான்"

மந்திரிமார் இருவர் தனித்து நின்று பேசிக்கொண்டிருந்தனர். நான் பயந்து போய் கதவிடுக்கில் ஒளிந்துகொண்டேன். என் காலடி யோசைகள் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார் ஒரு மந்திரி. அவரைத் தட்டிக் கொடுத்து, அச்சத்தை விரட்டித் தேற்றினார் இன்னொரு மந்திரி.

சுற்றுமுற்றும் பார்த்தார் ஒருவர். இன்னொருவர் யாரேனும் எங்கேனும் இருக்கிறார்களா என்று துருவித் துருவிப் பார்த்தார்.

"கனம், கொஞ்சம் காது கொடுத்துக் கேட்கணும். இங்கு யாரும் நம் பேச்சைக் கேட்கப் போவதில்லை. மனம் விட்டுச் சொல்கிறேன்—டெல்லியை விட்டு விலகினால் ஒழிய நம் உருப்பட வழியே இல்லை"

"நமக்குத் தெரியாமலா இருக்கு—அப்படி சிக்கியிருக்கோமே! பாருமே, எத்தனை முறை டெல்லிக்கு 'காவடி' தூக்கிவிட்டோம். ஒன்றுக்காவது உருப்படியான உதவி—உதவி கிடக்கட்டும், ஆதரவான பதிலாவது வாங்கி வந்திருக்கிறோமா? எல்லாம் போகட்டும், சோற்றுக்கு வழியில்லே, வயிற்றுக்குப் பழி போடாதே என்று கெஞ்சினோம். கைவிரிப்போடுதானே திரும்பினோம்"

"அவர்கள் செய்வது சரியென்று சொல்வது மட்டுமல்ல, நாமே ஒத்துழைக்க வேண்டியது!"

"அது கிடக்கட்டும். இப்பொழுது யார் வருவதாக அறிந்து இந்தத் தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள்?"

"யார் வந்தாலும் சரிதான் — வடநாட்டிலிருந்து மத்திய அரசாங்க மந்திரிகள் யார் வந்தாலும் கருப்புக்கொடிதானாம்!"

"எனக்கொரு ஆசை-எப்படியாவது நாமும் கருப்புக்கொடி காட்டாவிட்டாலும் கருப்புக் கைகுட்டையை வீசியாவது எதிர்த்துவிட வேண்டும் போலிருக்கு!"

"அப்படியும் ஒரேயடியாக அவர்களோடு சேரவும் கூடாது. அவர்கள் நம்மை விரட்டிவிட்டு புது சர்க்கார் செய்யவே இந்தத் திட்டம் போட்டிருக்கக் கூடாதா?"

"அவசரத்திலே அறிவைத் தூரத்தள்ளிவிடக் கூடாது. தேர்தலுக்கே நிற்பதில்லையென்பது அவர்கள் திட்டம். நாடறிய மேடையதிர அதிர சொல்லிவிட்டார்கள். பொழுது விடிந்தால் நமக்கு குழிபறிக்க சமயம் பார்த்தபடியே நம்மவர்களிலே எத்தனையோ அரசியல் 'வெட்டியான்கள்' உலவுகிறார்களே! அவர்களை விடவா, இந்த முன்னேற்றக் கழகத்தார் மோசமானவர்கள்!"

"நாம் மந்திரிகளாயிற்றே—எப்படி கருப்புக் கொடி காட்ட முடியும்"

"மந்திரிகள் என்று ஊரிலே யாருக்குத் தெரிகிறது நம்மை — அப்படியிருக்கிறது மந்திரிகள் நிலைமை! அதுவும் மாகாண மந்திரிகள் பஞ்சாயத்து போர்டு கிளார்க்குகள் மாதிரிதானே! எல்லாம் மத்திய சர்க்காரிடம்!"

"நாமே போவது என்பது எனக்கு உசிதமாகப் படல்லே—வேணுமானால் ஒரு வழியிருக்கிறது—நம்ம பயல்களை அனுப்பி விடுவோம் நம்ம பிரதிநிதிகளாக! ஒரு கொடிக்கு இரண்டு கொடிகளாகக் காட்டி விட்டு வரட்டும்"

"நம்ம பயல் ஏற்கனவே கருப்புக்கொடி தயார் பண்ணிவிட்டானே"

"மந்திரிகளாக இருக்கிறோம் இப்போது—இது சதமல்ல! நாளை நாமும் வெறும் ஆள்கள் தான். ஆகவே இன்றில்லா விட்டாலும் நாளை பிடிப்போம் கருப்புக்கொடி"

என் காலடி யோசைகள் கேட்டு திக்குக்கு ஒருவராய் பரக்க பரக்க நடந்து விட்டனர்.

*　　*　　*

நான் திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன் என் காலடியில் நண்பன் நாயகம் உட்கார்ந்திருந்தான். 'கருப்புத்துணி வாங்க, கடைவீதி செல்லலாம், வா' என்றான், அவ்வளவு காலையில்—அவனுக்கு அவ்வளவு அவசரம்! "கனவொன்று கண்டேனே?" என்றேன். "நீ காணும் கனவுகள் பல பலிப்பதுண்டே" என்றான். "இதுவும் பலிக்கத்தான் போகிறது!" என்றேன், உறுதிகலந்த குரலில்!

## காங்கிரஸ் கரைகிறது

காஞ்சிபுரம் டவுன் காங்கிரஸ் கமிட்டி உப தலைவர் தா. ராஜு (முதலியார்)எழுதுவதாவது:-

நான் 25 வருடங்களாக காங்கிரஸ் மகாசபையில் அங்கத்தினராக இருந்து மகாத்மா காந்தி அடிகள் ஆக்ஞையை சிரமேல் கொண்டு காங்கிரஸ் மகாசபை இடும் வேலைகளை ஏற்றுஎன்னால் முடிந்த அளவில் இடைவிடாமல் தொண்டு ஆற்றிவந்தேன். நாடு சுதந்திரம் அடைந்து நான்கு வருடங்கள் ஆகியும் இந்த நாட்டில் உள்ள ஏழை விவசாயிகளும், கோடிக்கணக்கான தொழிலாளிகளும் சுதந்திரம் வந்தால் உண்ண உணவும், உடுக்க ஆடையும், இருக்க வீடும் கிடைக்குமென்று நம்பி காங்கிரஸ் ஆரம்பிக்கும் போராட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள், தடியடிபட்டும், துப்பாக்கிக் கிரையாகியும், தூக்குமேடை ஏறியும், கோடிக்கணக்கான மக்கள் சிறையில் அடைபட்டும் பஞ்சத்தையும், பசியையும், பட்டினியையும் பாராமல் சுதந்திரம் பெற்றே தீருவோம் என்று போராடினார்கள் அந்த சமயத்தில் மனைவி வேறு, மக்கள் வேறு நண்பர்கள் வேறு, வேறு வேறாக பிரிந்து பாடுபட்டபாட்டாளிமக்கள் இன்றுபசியாலும்,பஞ்சத்தாலும், பட்டினியாலும் பரிதவித்து நடைப்பிணங்களாக வாழுகின்றனர். காங்கிரஸ் சர்க்கார் முதலாளி சர்க்காராக மாறிவிட்டது. எங்கு பார்த்தாலும் இலஞ்சம் தாண்டவமாடுகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே லஞ்சம் தாண்டவமாடுகிறது. மக்கள் பசி என்று சொல்லிக் கூலி கேட்டால் மார்பில்குண்டு பாய்கிறது. இதைநினைத்தால்மகாத்மா காந்தி அடிகள் கண்ட கனவு நினைவு ஆகாது. ஆகையால் தான் நான் காங்கிரஸ் மகாசபையிலிருந்து விலகிவிட்டேன்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

தலைமைவகித்த தோழர் மு. கருணாநிதி, 'அண்ணா களம் நோக்கி நம்மை அழைத்துவிட்டார். அவரது முழக்கம் நம்மையெல்லாம் சிலிர்க்கச் செய்துவிட்டது—சிங்க உணர்ச்சி கொள்ளச் செய்துவிட்டது. புறப்படுவோம்!!' என்றுகூறி தமது முடிவுரையை முடித்தார். வரவேற்புக் கழகத்தலைவர் வள்ளிமுத்து நன்றிகூற மாநாடு, மக்களின் மகிழ்ச்சியோடு முடிவுற்றது.

இரவு, நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி சி. என் ஏ. ஆகியோர் கலந்துகொண்டு நடிக்கும் "சந்திரமோகன்" நாடகம் நடைபெற்றது. பல்லாலாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

கோவில்பட்டியில் கூடிய நெல்லைமாவட்ட மாநாடு கழக வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுவிட்டது. அழகான பந்தல்! அருமையான சாப்பாடு! வந்தோரை வரவேற்று உபசரித்த அன்பு! 'என்னவேண்டும்?' என்று கேட்டுபசரித்தகாட்சி! ஆகியவைகள் கண்முன்னர் நிற்கின்றன. மாநாட்டின் நிர்வாகிகளான செயலாளர் துரைசாமி துணைச் செயலாளர் எஸ். நடராசன், கலிங்கன் தொண்டர் படைத்தலைவர் பாலகிருட்டினன், விளம்பர உறுப்பினர், ஆ. திராவிடமணி, பொருளாளர் துரைசாமி, வரவேற்புக் கழகத் தலைவர் ச. வே. அ. வள்ளிமுத்து ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும், போதாது! நெல்லை -- எப்போதும்போல இயக்க வளர்ச்சியைக் காட்டும் எல்லையென்பதை, மாற்றாருக்கும் மனம் இருண்டவர்களுக்கும் உணர்த்திவிட்டது. வாழ்க நெல்லை மாவட்ட வீரர்கள்!

நகரசபை வரவேற்பு

26-ந்தேதி மாலை கோவில்பட்டி நகரசபையில் பொதுச் செயலாளர் சி.என். ஏ., கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. நகரசபைத் தலைவர் தோழர் வள்ளிமுத்து அவைகளைப்படித்தளித்தார்.

—(ந. நி.)

## காஞ்சியில் பொதுக்கூட்டம்

11—9—50 திங்கள் மாலை 6-30-மணிக்கு காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டையில், மு. கருணாநிதி, இராம. அரங்கண்ணல், தில்லை. வில்லாளன் ஆகியோர் பேசுவர். தோழர் R. K. மூர்த்தி தலைமை வகிப்பார்.

காஞ்சி பகுத்தறிவு மன்றம்.


## மக்கள் அரசியலறிவு பெறுதவரை

சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம், என்பதெல்லாம் வெறும் கேலிக்கூத்து!

ஆகவே,

அரசியலறிவு பெற, ஆசிரியர்

தோழர் எஸ். சதாசிவம் அவர்கள்

எழுதிய

| | |
|---|---|
| காரல் மார்க்ஸ் | 0 12 0 |
| பெரியாரும், கலிஞரும், அண்ணாவும் | 0 8 0 |
| ஏழையின் அரசியல் | 0 8 0 |
| முதலாளித்துவம் ஒழிக! | (அச்சில்) |

ஆகிய நூல்களைப் படியுங்கள்.

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு தனிப்பிரதி வேண்டுவோர் தேவையான ஸ்டாம்பு அனுப்புக.

விவரங்கட்கு:—

இன்பவாழ்வுப் பதிப்பகம்,

ஆர். எஸ். புரம் – கோயமுத்தூர்.

# "திராவிடநாடு நாள்"

செப்டம்பர்-17, திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கநாள் — கழகத் தோழர்களின் மறுமலர்ச்சிநாள்—திராவிடப் பெருமக்களின் புத்துணர்ச்சிநாள்! அந்த நாளைத் "திராவிட நாடு நாளா"கத் தக்கமுறையில் கொண்டாடும்படி கிளைக்கழகங்களையும், கழகத் தோழர்களையும், பிற திராவிடப் பெருங்குடி மக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

செப்டம்பர் 17, ஞாயிற்றுக்கிழமையை முதலாகக்கொண்ட அந்த வாரத்தை "திராவிட நாடு நாள்" கொண்டாடும் வாரமாகக் கொள்ளலாம்.

கொடியேற்றுவித்தல், ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டம் கூட்டுதல், கழகக்கொள்கைகளை விளக்கித் துண்டு அறிக்கை வெளியிடுதல், நாடக அரங்கு—இசையரங்கு ஏற்படுத்தல் ஆகிய முறைகளைக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளாகக் கொள்ளவேண்டுகிறோம்

விழாக் கொண்டாடும் தோழர்கள் அமைதி குலையாமல், ஆர்வம் குறையாமல், ஒழுங்கு, கட்டுப்பாடு, உறுதி, ஊக்கம், ஆகிய பண்புகளை முறையோடு கையாண்டு விழாவைச் சிறப்புறவும், வெற்றிகரமாகவும் நடத்தும்படி வேண்டிக்கொள்கிறோம்.

சென்னை,
3—9—50.

இரா. நெடுஞ்செழியன்,
தி. மு. க. பிரச்சாரக் குழுச்செயலாளர்.

# நாடெங்கும் பொதுக்கூட்டங்கள்

**17—9—50**

சென்னை மு. கருணாநிதி, கண்ணதாசன், என். எஸ். இளங்கோ.
சேலம் கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல்.
கோயமுத்தூர் டி. கே. சீனிவாசன்
திருச்சி இரா. நெடுஞ்செழியன்
மதுரை ஈ. வெ. கி. சம்பத்.
விருதுநகர் காஞ்சி. கல்யாணசுந்தரம்.
தூத்துக்குடி சி. என். அண்ணாதுரை, சிவசாமி, தங்கப்பழம்
திண்டுக்கல் க. அன்பழகன்
காஞ்சிபுரம் சி. பி. சிற்றரசு, ஈழத்தடிகள்.
தஞ்சை ஏ. சித்தையன், தில்லை வில்லாளன்.
குடந்தை என். வி. நடராசன்

**18—9—50**

திசையன்விளை சி. என். அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத்.

**22—9—50**

நாகர்கோவில் என். எஸ். இளங்கோ.

**24—9—50**

அருப்புக்கோட்டை ஈ. வெ. கி. சம்பத்.
கடம்பூர் என். வி. நடராசன், சிவசாமி, தங்கப்பழம்.
உறையூர் மு. கருணாநிதி, அரங்கண்ணல், கண்ணதாசன்.
மாயவரம் இரா. நெடுஞ்செழியன்.

# ஆங்காங்கே

6-8-50-ல் புதுக்கோட்டை தெற்கு ராச வீதியில் அமைந்திருக்கும் அழகிரி சொற்பயிற்சி மன்றத்தில், 'திராவிடமும் ஆரியமும்' எனும் பொருள் பற்றி, சண்முகம், அப்துல் வகாப், முகம்மது சல்தான், மணி, முகம்மதுகனி, தங்கவேலு ஆகியோர் பேசினர்.

12—8—50ல் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவிலைச் சேர்ந்த நாரணபுரத்தில் இரவு 8 மணிக்கு குருசாமி தலைமையில் மறுமலர்ச்சிக் கலைமன்றம் துவக்கப்பட்டது. மன்ற செயற்குழுவினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். தலைவர்:— கோ. இராமசாமி, செயலாளர்:— சேதுராமன், பொருளாளர்:— குருசாமி, சி. சுந்தரராசன், இராசகோபால், இராமசுப்பு, சுப்பையா, கி. இராசகோபால், இராமானுசம், வேலுச்சாமி, பாலகிருட்டினன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள்.

15—8—50 அன்று பாலையூரில் வள்ளுவர் கழகம் புதிதாகத் துவக்கப்பட்டது. தலைவர்:— இரா. சுப்பிரமணியன், செயலாளர்:—நாகப்பன், துணைச் செயலாளர்:— வீரய்யா, நிதிகாப்பாளர்:- சுப. ஆவுடையப்பன், நூல்நிலைய பாதுகாப்பாளர்:- கா. பக்கிரிசாமி.

16—8—50ல் அலவாக் கோட்டை கபிலர் கலைக் கழகச் சாதாரண கூட்டம் சின-பொன்னுச்சாமி தலைமையில் கூடியது. துவக்க விழா வரவு செலவுக் கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. செப்டம்பர் முதல் வாரத்தில் முதியோர் கல்விப் பள்ளியைத் துவக்குவதெனவும், அதற்கு சிவகங்கை தாசில்தார், டிப்டி இன்ஸ்பெக்டர் ஆகியோரை அழைத்துத் துவக்கவிழா நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

20—8—50 மாலை 6-45 மணிக்கு புதுக்கோட்டை அண்ணா பகுத்தறிவு மன்ற சார்பில் திலகர் மைதானத்தில் தமிழ்ச் சேரன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. ஏ. கே. வேலன், பி. கே. முத்து மற்றும் பல தோழர்களும் பேசினர். அன்று மாலை, கம்யூனல் ஜி. ஓ. ஆதரவு சைக்கிள் ஊர்வலம் அருணாசலம் தலைமையில் நடந்தது குறிப்பிடத்தக்கது.

21—8—50ல் மதுரை அமெரிக்கன் கல்லூரி வள்ளுவர் தமிழ்க் கழகத் துவக்க விழாக் கூட்டம் மாலை 5 மணிக்கு கல்லூரிப் பேரவை மன்றத்தில் கல்லூரித் தலைவர் எஸ். ஜே. சவரிராசன் எம். ஏ. தலைமையில் நடந்தது. கார்மேகம் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர். ரா. பி. சேதுப்பிள்ளை விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். செயலாளர் முத்தியாலு நன்றி கூறினார்.

23—8—50ல் திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் எம். பி. வடிவேல் தலைமையில் கூடியது. சென்னை மாகாண நில சீர்திருத்தக் கமிட்டிக் காரியதரிசி எஸ். ஆர். கயிவார் ஐ. ஸி. எஸ். அவர்கள் அழைப்புப்படி சங்க சார்பாக எம். பி. வடிவேல், வி. எஸ். விசுவநாதம், கி. அப்பாதுரை, ஆர். பக்தவத்சலம், எஸ். ஏ. சூரவேல், ஆர். வி. சண்முகம், இ. எல். சௌந்தரராசன், ஏ. எம். இராமசாமி, டி. ஏ. ஆறுமுகம், டி. கே. கோவிந்தசாமி, வி என். தத்தப்பன் ஆகியோரை சென்னைக்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

27—8—50 இரவு 7-மணிக்கு திருப்பூர் பழையநகர், சீர்திருத்த நாடக மன்ற ஆரம்பவிழா பால்ராஜ் தலைமையில் நடந்தது. கோ. எஸ், மணி, க. முத்துராஜ், டி. வி. வி. அப்பன், டி. நடராசன் ஆகியோர் இயல், இசை, நாடகம் என்பன பற்றிச் சொற்பொழிவாற்றினர். கேசவன் நன்றி கூறினார்.

26-8-50ல் ஆரணி வேலாயுதம் படிப்பகத்தின் சார்பில், பி. வெ. தி. சம்பத் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கோவிந்தன் வகுப்புநீதி வேண்டும் என்பது குறித்துப்பேசினார். காசி என். இரத்தினம் மறைவிற்குவருந்தி அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

27—8—50 சென்னை ரூன் 112, அவதானம் பாப்பையர் தெருவிலுள்ள மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தில் பகல் 2 மணிக்கு வே. நா. அர்ச்சுனன் தலைமையில் கூடிய செயற்குழுக்கூட்டத்தில கழகக்கணக்கு சரிபார்க்கப்பட்டது. 10—9—50ல், மன்ற சார்பில் நடந்த திருக்குறள் வகுப்பில் அறத்துப்பால் முடிந்து பொருட்பால் தொடங்குவதால் ஒரு சிறப்புக்கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. வகுப்புநீதியை ஆதரித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

31—8-50ல் மாயவரம் கூறைநாடு இலட்சுமி படப்பிடிப்பு நிலையத்தில், தி. ப. நாதன் தலைமையில் ஜி. இராமகிருட்டிணனுக்கு பிரிவுபசாரவிருந்துக்கூட்டம் நடந்தது. சம்பந்தம், பி. டி. இராசன், பக்கிரிசாமி, ஜோசப், இரெ. ஜோசப், கணேசு, பாண்டியன் ஆகியோர் பேசினர்.

இளங்கோ இலக்கிய மன்றம் என்ற பெயருடன் வாணியம்பாடி கல்லூரி, உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் முயற்சியினால் ஒருமன்றம் துவக்கப்பட்டது. தலைவர் தன. இராமச்சந்திரன், பொதுச் செயலாளர்:- வை. கணேசன், கூட்டுச் செயலாளர்:- ஏ. ஆர். பார்த்தசாரதி, துணைச்செயலாளர்:- குஞ்சிதபாதம், பொருள்காப்பாளர்: — வ. வெங்கடாசலம் மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

*

# புதுக் கழகங்கள்

*

**சின்னாளப்பட்டி (கிளை)**

14—7—50 இரவு 9மணிக்கு பி. எஸ். எம் சவுடையா கடையில் தி. மு. க. ஆதரவாளர்கள் கூடி, சின்னாளப்பட்டி தி. மு. க. கிளையை நிறுவினர். செயலாளர்:— எஸ். சேதுபதி, துணைச் செயலாளர்:— பி. எஸ். எம். சவுடையா, மற்ற செயற்குழுவினரையும் தெரிந்தெடுக்க முடிவு செய்யப் பட்டது.

**முகவூர் (கிளை)**

15—8—50 முகவூர் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயற்குழுவினர் தெரிந்தெடுக்கப் பட்டனர். செயலாளர்:— நவநீதகிருட்டினன், விளம்பர உறுப்பினர்:— பாலகுரு, பொருள் உறுப்பினர்:— ந. அன்னமலை, மற்ற செயற்குழுவினர்:— வீ. அ. முத்தையா, மு. மாரியப்பன், த. கணபதியப்பன், ப. கணபதி.

**பலராமபுரம் (கிளை)**

26—8—50ல் கழகப் பொது உறுப்பினர் கூட்டம், சுப்பிரமணியம் தலைமையில் கூடிய தி. கழக நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டானவுடன், நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:-நடராசன், துணைச்செயலாளர்:-சுப்பிரமணியம், பொருள் உறுப்பினர்:- மா. நாயனார், விளம்பர உறுப்பினர்:- ஆ. அருணாசலம், சி. ம. சீனுவாசன், இராம. நாகமணி, இராம. அகத்தியன், பா. சுப்பிரமணியன், சி. ம. விசுவநாதம், ஆகியோர் மற்ற செயற்குழுவினர். ந. நடராசன், ஆ. அருணாசலம் ஆகியோர் மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்தனர்.

**மருதானை (கொழும்பு கிளை)**

27-8-50 மாலை 6-30 மணிக்கு 119/43 ஸ்மின்னர்ஸ் ரோடு தெற்கில் அமைந்திருக்கும் கட்டிடத்தில் இயக்க ஆர்வமுள்ளோர் அனைவரும் கூடி மருதானை தி. மு. க. கிளைநிறுவினர். செயற்குழுவினர் தெரிந்தெடுக்க 3—9—50ல் மீண்டும் கூடுவதென முடிவு செய்யப்பட்டது. அன்றே கழக நிறுவனமும் செய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

*

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்.

எங்கள் வாழ்க்கை ஒப்பந்தம் வரும் 15—9—50 வெள்ளியன்று காலை 9½ மணியளவில் குறிஞ்சிப்பாடி எங்கள் பாட்டனார் திரு. கு. த. பெரியசாமி அவர்கள் இல்லில் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். தாங்கள் வருகை தந்து மகிழ்விக்க வேண்டுகிறோம்.

இரெ. இளவழுதி
பெ. பா. விசாலாட்சி

*

5-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், இப்போது—நமது எச்சரிக்கையின் எதிரொலி, காங்கிரஸ் முகாமிலிருந்தே கேட்கிறது. வராத இடங்களிலிருந்தெல்லாம் வருகிறது.

"9 லட்சம் டன் உணவுப் பொருளை வெளியிலிருந்து அனுப்பினாலொழிய இவ் வருஷ உணவு நிலைமையைச் சமாளிக்க முடியாது என்று சென்னை ராஜ்யம் இவ்வருஷ ஜனவரியிலேயே இந்தியசர்க்காருக்குத்தெரிவித்தது. 3 லட்சம் டன்னுக்குமேல் முடியாது என்று இந்திய சர்க்கார் கையை விரிக்காமல் சென்னையின் குறைந்தபட்ச தேவையை பூர்த்தி செய்வதில் அக்கரை காட்டியிருக்குமானால் இன்று இந்த ராஜ்யம் அனுபவிக்கும் அவதியே வந்திருக்காது"

இந்திய சர்க்கார் அக்கரை காட்டியிருந்தால், அவதியே வந்திருக்காதாம்!

கடந்த மாதம் 11-ந் தேதிய 'தினசரி' தலையங்கம் கூறுகிறது!

இந்திய சர்க்கார்—மாகாணங்களிடம் அக்கரை காட்டுவது இயலாது, அன்று நாம் சொன்னோம்!

இப்போது, காங்கிரஸ் ஏடு 'தினசரி' தீட்டுகிறது இப்படி!!

அதிகாரங்களைக் குவிக்கிறீர்கள், மத்திய சர்க்கார் வசம். அதன் விளைவு, வேதனையாக மாறும். எதற்கெடுத்தாலும் டெல்லிக்கு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்—அப்படி ஏற்பட்டால்: மாகாண சர்க்காருக்கு மதிப்பு ஏற்படாது! மாகாண மந்திரிகள் 'பிச்சைபேந்தும் பெருமாள்களாக'க் கருதப்படுவர்!! என்று சொன்னோம். அதுபற்றி, இப்போது, டாக்டர் இலட்சுமணசாமி கூறுகிறார்.

"நான், டெல்லி, பம்பாய், கல்கத்தா முதலாய இடங்களுக்குச் சென்றிருந்தேன். அங்கெல்லாம் சென்னை மந்திரிகளைப்பற்றி மோசமான பிரசாரம் திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. வேறு மாகாண மந்திரிகள் டெல்லிக்குச் சென்றால் அவர்கள் நடத்தப்படும்விதம் வேறு மாதிரி. ஆனால் சென்னை மந்திரிகள் எதையாவது கோரி டெல்லி சென்றாலோ, அங்கு அவர்களுக்குச் சரியான பதில்கூடத் தரப்படுவதில்லை"

கூறுகிறார், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர். கடந்த ஆக. 5-ந் தேதி சென்னை மேல் சபையில் வெளியிட்ட தகவல் இது.

டெல்லி — சென்னை மந்திரிகளை மதிப்பதில்லையாம்!

எப்படி மதிப்பார்கள்? தொட்டது தொண்ணூற்றுக்கும் டெல்லிக்குக் காவடி தூக்கிக்கொண்டிருந்தால்?

பாலம் கட்ட பக்தவத்சலம் பணம் கேட்டால் கோபப் பார்வை! கோபால ரெட்டி கடன் கேட்டால் — மிரட்டல்! விக்டோரியா உணவு கேட்டால்—ஓடு, என உத்தரவு! வேதனையான காட்சி! வெட்கங் கெட்ட நிலை!!

தென்னாடு, உணவுப் பொருள் இல்லாமல் திண்டாடுகிறது. உணவுப் பொருள் இல்லையென்றால், அது கிடைக்கும் இடத்திலிருந்து வாங்க வேண்டும்.

பசியால் சாகிறார்கள், பதைத்து உயிர்விடுகிறார்கள் மக்கள் என்று கேட்டுச் சகித்துக்கிடக்க, மரக்கட்டைகளல்ல நமது மந்திரிமார்கள்!

ஆனால், அதிகாரம் இல்லை என்று கூற வெட்கப்பட்டு, மரக்கட்டைகள்போல நடிக்கின்றனர்! வேதனை அதிகமானால், உணவு மந்திரி தன்னையும் அறியாமலே "நம்பினேன்—ஏமாற்றிவிட்டது டில்லி சர்க்கார்" என்று, துடித்துச் சொல்கிறார்.

உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று அறிந்ததும், அதற்கான ஆயத்தங்களைச் செய்ய அதிகாரம் இல்லையென்பதால் —நம்பினார்கள்!

டெல்லி சர்க்கார் வெளி நாடுகளிலிருந்து அரிசி வரவழைத்துத் தரும் என்று நம்பினார்கள்! வேண்டும் 8000 டன் என்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

கேட்டது 8000!

கிடைத்தது 5000!!

"8000 டன் கிடைக்காவிடில் மாகாணத்தில் பஞ்சம் ஏற்பட்டுவிடும்" என்று பரிதாபத்தோடு கெஞ்சிற்று, மாகாண சர்க்கார்!

"போதும் இது, 5000 டன்தான் அனுப்ப முடியும்" என்று தலையிலடித்தது, டெல்லி ஆட்சி!

விளைவு, இங்கே வேதனை. பட்டினி! பிள்ளையோ பிள்ளை வியாபாரம்!! வீதிகளில் பிணங்கள்!

இந்தக் கோரச் சம்பவம், டெல்லி ஆட்சியின் போக்கைத் தெளிவாக்கியிருக்கிறது. தன் மக்களைக் காப்பாற்றும் அதிகாரம் மாகாண சர்க்காருக்கிருக்கவேண்டும் — இல்லையென்றால் ஆபத்து, என்ற உண்மையை ஏமாளிகளாக ஆனோர் இதயங்களிலும் படச் செய்திருக்கிறது!

"சென்னை மாகாணம் தனக்குத் தேவையான தான்யங்களை இறக்குமதி செய்ய, மத்திய சர்க்கார் அனுமதிக்கவேண்டும்.

இவ்வாறு செப். 2-ந் தேதி சென்னை மேல் சபையில் பி. நாராயணசாமி நாயுடு என்பவர் ஒரு தீர்மானங் கொணர்ந்தார், ஆளவந்தாரின் போக்கை எடுத்துக் காட்டவேண்டி!

மாகாண சர்க்கார், மத்திய சர்க்கார் ஆதிபத்யத்திலிருந்து பிரியவேண்டும் என்று கூறும் நம்மைச் சேர்ந்தவரல்ல அவர்! ஆகவேதான் 'அனுமதிக்கவேண்டும்' என்று பேசியிருக்கிறார். ஆனால், அவர் போன்றார் இதயங்களில் உதயமாகியிருக்கும் உணர்ச்சி சாதாரணமானதல்ல.

மந்திரிமார்கள்,
காங்கிரஸ் சட்ட சபையினர்,
பொதுநிலையிலுள்ளோர்

எல்லோரிடையும், மத்திய சர்க்காரின் ஆதிபத்திய காட்சி தென்பட்டு வருகிறது.

பட்டால்தானே தெரியும், கஷ்டம்!

வாதைப்படுகின்றார். இப்பொழுது உணருகின்றனர், வடநாட்டு ஆதிபத்தியத்தின் கொக்கரிப்பை!

எத்தன் நிலையில் வடநாடு!—நாம் ஏமாளிகளாகி வருகிறோம் என்ற உணர்ச்சி இப்போது, ஆங்காங்கும் அரும்பியிருக்கிறது. அதைத் தெளிவாக்கிக் காட்டுகிறது, உணவுப் பிரச்சினையில் இந்திய சர்க்கார் நடந்துகொண்ட போக்கு.

இந்த மானங் கெட்ட நிலையை வெளியே சொல்ல வெட்கப்படுகிறார்கள் மந்திரிமார்கள்.

வெட்கம் — துக்கத்தைப் போக்கிவிடாது. நிலையான இன்பத்தையும் தந்துவிடாது. எத்தனின் தொடர்பை அறுத்துக்கொண்டாலொழிய அந்த நல்ல நாள் வராது!


# சிவகங்கையில்

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக

# முதல் மாநாடு

**30-9-50, 1-10-50 சனி, ஞாயிறு தேதிகளில்**

இராமச்சந்திரன் பந்தலில் நடைபெறும்.

| | |
|---|---|
| தலைவர் | என். வி. நடராசன் |
| துவக்குபவர் | எம். எஸ். கனகராசன் |

சி. என். அண்ணாதுரை, கவிஞர் பாரதிதாசன்

இன்னும், இயக்கத் தோழர்கள் பலரும் கலந்து கொள்வர்.

சனி இரவு, எம். எம். மாரியப்பா, நாகூர் ஹனீபா இசைவிருந்து

ஞாயிறு இரவு, நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி, சி. என். அண்ணாதுரை

மற்றும் பலர் நடிக்கும்

## ★ சந்திரமோகன் ★

மாநாட்டுக் கட்டணம் வரவேற்பாளர் ரூ 5, பிரதிநிதி ரூ 2, பார்வையாளர் ரூ 1.

பெண்களுக்குத், தனி இடவசதி உண்டு.

வரவேற்புக் குழுவினர்.


Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95. Tirukkachinambi Street Kancheepuram